**<u>கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்– 2018ம் ஆண்டு மே மாதம் 9ம் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது.</u>**

**<u>பொருள் எண்– 01</u>**

இந்நகராட்சி பகுதியில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் (kfw) கீழ் பகிர்மான குழாய்கள் அனைத்து தெருக்களிலும் பதிக்கப்பட்டு பணிகள் முடிவடைந்து சேதமான சாலைகள், பதிக்கப்பட்ட பகிர்மான குழாய்களில் வீட்டு இணைப்புகளை மாற்றியமைத்ததால் சேதமான சாலைகள் மற்றும் மழை போன்ற இயற்கை இடர்பாடுகளால் சேதமுற்ற சாலைகளை கணக்கீட்டு கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் பெயர் | நீளம் மீட்டரில் | அகலம் மீட்டரில் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 குமந்தாபுரம் ஆதிதிராவிடர் வடக்குத் தெருவில் தார்சாலை அமைக்கும் பணி. | 175.00 | 4.50 | 8.60 |
| 2 | வார்டு எண்.33 கிருஷ்ணாபுரம் கருப்பன்கோவில் வடக்குத் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 200.00 | 4.00 | 8.00 |
| 3 | வார்டு எண்.4 வெறியன்கோவில் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 105.00 | 2.50 | 3.00 |
| 4 | வார்டு எண்.5 கிருஷ்ணாபுரம் பள்ளிக்கூடம் தெற்குதெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 125.00 | 3.60 | 5.00 |
| 5 | வார்டு எண்.6 முத்துகிருஷ்ணாபுரம் பள்ளிக்கூடம் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 200.00 | 4.00 | 8.00 |
| 6 | வார்டு எண்.7 வாணுவர் பிள்ளையார் கோவில் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 200.00 | 4.00 | 8.00 |
| 7 | வார்டு எண்.14 அல்லிமுப்பன் தெரு மேற்கு பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 195.00 | 7.00 | 14.00 |
| 8 | வார்டு எண்.8 நாட்டாண்மை தெரு கீழ்பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 110.00 | 3.30 | 4.00 |
| 9 | வார்டு எண்.10 மாவடிக்கால் வ.உ.சி தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 110.00 | 3.50 | 4.50 |
| 10 | வார்டு எண். 21 கிருஷ்ணன்கோவில் தென்வடல் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 110.00 | 3.50 | 4.50 |
| 11 | வார்டு எண்.22 ஆதிதிராவிடர் தெற்குத் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 180.00 | 4.00 | 7.40 |
| 12 | வார்டு எண். 26 வடக்கத்தியம்மன் கோவில் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 130.00 | 4.00 | 6.00 |
| 13 | வார்டு எண்.27 வடக்கத்தியம்மன் கோவில் | 150.00 | 3.75 | 6.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | தென்வடல் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | | | |
| 14 | வார்டு எண்.32 ரகுமானியாபுரம் ஜானகியம்மாள் தெருவில் வடக்கத்தியம்மன் கோவில் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி. | 200.00 | 3.75 | 8.00 |
| 15 | வார்டு எண். 8 மற்றும் 9 ல் உள்ள சிந்தாமதார் பள்ளிவாசல் தெருவில் தார்சாலை அமைக்கும் பணி. | 350.00 | 6.00 | 25.00 |
| | **மொத்தம்** | **2540.000** | | **120.00** |

மேற்காணும் சாலை பணிகளை பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி செய்ய வேண்டியுள்ளதால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் (TURIP)-2018–19 ன் கீழ் அரசு மானியமாக பெற்று மேற்காணும் சாலை பணிகளை செய்திட தயார் செய்யப்பட்டுள்ள திட்ட பிரேரணைக்கு அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

1. அங்கீகரிக்கலாம்.
2. மேற்காணும் சாலை பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் (TURIP)-2018–19 ன் கீழ் அரசு மானியமாக பெற்று சாலை பணிகளை செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் அனுமதி பெற திட்ட பிரேரணை அனுப்பிட நடிவடிக்கைகள் மேற்க்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1760/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 117</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–02</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையில், நகராட்சிப் பகுதிகளில் உற்பத்தியாகும் திடக்கழிவுகளை அந்தந்த வார்டு பகுதிகளிலேயே கலவை உரங்கிடங்கு அமைத்து மக்கும் குப்பைகளை உரமாக மாற்றுவதற்கும் மக்காத மறுசுழற்சி பொருள்களை தனியே பிரித்து எடுப்பதற்கும் **Micro compost Processing Centre (MCC)** அமைக்கும் மாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் 6 இடங்களில் **Micro compost Processing Centre (MCC)** அமைக்கும் பணிகளுக்கும் மற்றும் **Micro compost Processing Centre (MCC)** - களுக்கு தேவையான பேட்டரியில் இயங்கும் வாகனம் ( **Battery Operated Vehicle**) 36 எண்ணம் விநியோகிக்கும் பணிக்கும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் சுடுகாடு வளாகம் (தென்பகுதி) புதிதாக **Micro compost Processing Centre (MCC)** அமைக்கும் பணிக்கு | ரூ.45.00/– |
| 2. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் கலவை உரக்கிடங்கு வளாகம் அமைந்துள்ள பகுதியில் புதிதாக **Micro compost Processing Centre (MCC)** அமைக்கும் பணிக்கு | ரூ.45.00/– |

| | | |
|---|---|---|
| 3. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 1 குமந்தாபுரம் நடுத்தெருவில் பழுதடைந்து பயனற்ற நிலையிலுள்ள கழிப்பறையை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக **Micro compost Processing Centre (MCC)** அமைக்கும் பணிக்கு. | ரூ.45.00/– |
| 4. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 20 அட்டக்குளம் ஊரணி கீழ்புறம் பழுதடைந்து பயனற்ற நிலையிலுள்ள கழிப்பறையை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக **Micro compost Processing Centre (MCC)** அமைக்கும் பணிக்கு. | ரூ.49.80/– |
| 5. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.33 மேற்கு மலம்பாட்டை ரோடு, கிருஷ்ணாபுரம். மேற்கு பகுதியில் உள்ள சுடுகாடு வளாகம் அருகேயுள்ள இடத்தில் புதிதாக **Micro compost Processing Centre (MCC)** அமைக்கும் பணிக்கு. | ரூ.45.00/– |
| 6. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.8 சிந்தாமதார் பள்ளிவாசல் தெரு சமுதாய கழிப்பிடம் மேல்புறம் உள்ள இடத்தில் புதிதாக **Micro compost Processing Centre (MCC)** அமைக்கும் பணிக்கு. | ரூ.45.00/– |
| 7. | இந்நகராட்சிப் பகுதியில் 6 இடங்களில் மக்கும் குப்பைகளை உரமாக மாற்றுவதற்கும் மக்காத மறுசுழற்சி பொருள்களை தனியே பிரித்து எடுப்பதற்கும் **Micro compost Processing Centre (MCC)** தேவையான பேட்டரியில் இயங்கும் வாகனம் ( **Battery Operated Vehicle**) 36 எண்ணம் விநியோகிக்கும் பணி (36 எண்ணம் BOV x ரூ.1,80,000) | ரூ.64.80/– |
| | **மொத்தம்** | **339.60** |

மேற்காணும் வரிசை எண்.1 முதல் 7 வரை உள்ள பணிகளை திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் புதிதாக **Micro compost Processing Centre (MCC)**அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுகளுக்கு உரிய நிர்வாக அனுமதியும் மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்து தர கேட்டு தயார் செய்யப்பட்டுள்ள திட்ட பிரேரணைக்கு அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

1. அங்கீகரிக்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் புதிதாக **Micro compost Centre (MCC)** அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு உரிய நிர்வாக அனுமதியும் மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்து தர கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் திட்ட பிரேரணை அனுப்பிட நடவடிக்கைகள் மேற்க்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1327 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 118</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 03</u>**

இந்நகராட்சிப்பகுதியில் செயல்படுத்தப்பட்ட புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் (KFW) 2010–2011ன் கீழ் நகர்பகுதிகளிலுள்ள பழைய பகிர்மான குழாய்கள் அனைத்தையும் புதிய பகிர்மான குழாய்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பழைய குடிநீர் வீட்டு இணைப்புகளை புதிய பகிர்மான குழாய்களில் மாற்றியமைக்கும் பணிக்கு (IUDM) 2013–2014ன் கீழ் ரூ.605.23 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதனடிப்படையில் இந்நகராட்சிப்பகுதிகளில் மொத்தமுள்ள குடிநீர் இணைப்புகள்13971ல்

13717 குடிநீர் இணைப்புகளை புதிய பகிர்மான குழாய்களில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 254 குடிநீர் இணைப்புகளையும் மற்றும் பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டு புதிதாக 15000 வீட்டு குடிநீர் இணைப்புகள் ஆக மொத்தம் 15254 வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்க ரூ.615.00 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. ஆகவே மேற்காணும் குடிநீர் இணைப்பு பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டி தயார் செய்யப்பட்டுள்ள திட்டபிரேரணைக்கு அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

1. அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சிப்பகுதியிலுள்ள பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டு நிலுவையிலுள்ள பழைய குடிநீர் இணைப்புகள் 254 மற்றும் புதிதாக 15000 வீட்டு குடிநீர் இணைப்புகள் ஆக மொத்தம் 15254 வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணை அனுப்பிட நடிவடிக்கைள் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.
3. நகராட்சிப் பகுதியில் புதிதாக 15254 வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கான தொகை ரூ.615.00 லட்சத்தினை TUFIDCO , சென்னை நிறுவனம் மூலம் வட்டியில்லா கடனாக பெற்று திட்டத்தினை செயல்படுத்திடவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 261/2013/இ1)**

**<u>தீர்மானம் எண். 119</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 04</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நேரடி ஆய்வுக்கூட்ட அறிவுரையில், நகராட்சிப்பகுதிகளில் பராமரிக்கப்படும் உரக்கிடங்குகளில் பல ஆண்டுகளாக சேகரமாகி தேங்கியுள்ள குப்பை கழிவுகளை Bio-Mining முறையில் அப்புறப்படுத்த உரிய நடவடிக்கை மேற்க்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்கள், அதன்படிக்கு இந்நகராட்சி போகநல்லூர் உரக்கிடங்கில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் சேகரமாகி தேங்கியுள்ள பழைய குப்பை கழிவுகள் தோரயமாக சுமார் 30050.00 கனமீட்டர் (M3) அளவில் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் பழைய குப்பை கழிவுகளை Bio-Mining முறையில் உரமாக்கிட ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் பணிகளை செயல்படுத்திட உரிய நிர்வாக அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடும் செய்து தர வேண்டி தயார் செய்யப்பட்டுள்ள திட்டபிரேரணைக்கு அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

1. அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சிப் பகுதி போகநல்லூர் உரக்கிடங்கில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் கொட்டப்பட்டுள்ள பழைய குப்பை கழிவுகள் Bio-Mining முறையில் அப்புறப்படுத்த தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு உரிய நிர்வாக அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடும் செய்து தர வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணை அனுப்பிட நடிவடிக்கைள் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1327/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 120</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 05</u>**

இந்நகராட்சியின் வருவாய்வரத்தக்க குத்தகை இனம் இந்நகராட்சிப்பகுதியில் சாலைஓரங்களில் வியாபாரம் செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தின் மூன்றாண்டு குத்தகை காலம் 31.03.2018 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. மேலும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.342 நாள்.23.11.2017ல் மேற்படி இனத்தினை 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகைக்குவிடுவதற்கு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி இவ்வினத்திற்கு 19.01.2018 அன்று

பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவிபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு

| வ. எண் | பெயர் / முகவரி | டெபாசிட் விபரம் | ஏலக்கேள்வி தொகைரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகைரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு,R. சுடர்மணி,<br>S/o, சி.ராமசாமி,<br>16B, செவல் விளைத் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.300000/– | இல்லை | ரூ.200000/– |
| 2 | திரு.R.கார்த்தீஸ்வரன்,<br>S/o, சி.ராமசாமி,<br>16B, செவல் விளைத் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.300000/– | இல்லை | ரூ.205000/– |

மேலும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் . 2015–16ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.305000/–, 2016–17ம் ஆண்டின் குத்தகை தொகைரூ.320500/– மற்றும் 2017–18 ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.336263/– விட குறைவாகவும் உள்ளதால் இவ்வினத்திற்கு . 27.02.2018 , 16.03.2018,23.03.2018 மற்றும் 28.03.2018 தேதிகளில் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்கண்ட ஏலங்களில் யாரும் கலந்து கொள்ளவும் இல்லை. ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கவும் இல்லை. எனவே 01.04.2018 முதல் இந்நகராட்சி துப்புரவு பணியாளர் மூலம் தொடர்ந்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து ஐந்து முறை ஏலம் கோரியும் சராசரித்தொகைக்கு ஏலம் கோரமுன்வராததால் மேற்படி இனத்திற்கு ஏற்கனவே 2015–2018 பொது ஏல நிபந்தனையில் குறிப்பிட்டுள்ளவாறு தற்போது உள்ள வைப்புத்தொகை ரூ.300000/–லிருந்து ரூ.200000/– மாக குறைவு செய்து 13.04.2018 ம் தேதி மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி தேதியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| பெயர் / முகவரி | டெபாசிட் விபரம் | ஏலக்கேள்வி தொகைரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகைரூ. |
|---|---|---|---|
| திரு.R.கார்த்தீஸ்வரன்,<br>S/o, சி.ராமசாமி,<br>16B, செவல் விளைத் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.200000/– | இல்லை | ரூ.210000/– |
| திரு.பி.ஆறுமுகச்சாமி,<br>67பி.வடக்கு விளைத்தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.300000/– | இல்லை | ரூ.230000/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பி.ஆறுமுகச்சாமி என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.230000/– கூடுதலாக உள்ளது. இந்நிலையில் 01.04.2018 முதல் 24.04.2018 வரை அலுவலகம் மூலம் வசூல் செய்யப்பட்ட தொகை பின்வருமாறு.

| தேதி | தொகைரூ. |
|---|---|
| 01.04.2018 | 940 |
| 02.04.2018 | 990 |
| 03.04.2018. | 950 |
| 04.04.2018 | 1060 |
| 05.04.2018 | 940 |
| 06.04.2018 | 950 |
| 07.04.2018 | 820 |

| தேதி | தொகைரூ. |
|---|---|
| 13.04.2018 | 680 |
| 14.04.2018 | 710 |
| 15.04.2018 | 640 |
| 16.04.2018 | 690 |
| 17.04.2018 | 720 |
| 18.04.2018 | 710 |
| 19.04.2018 | 700 |

| | | | | |
|---|---|---|---|---|
| 08.04.2018 | 820 | | 20.04.2018 | 670 |
| 09.04.2018 | 760 | | 21.04.2018 | 600 |
| 10.04.2018 | 950 | | 22.04.2018 | 600 |
| 11.04.2018 | 830 | | 23.04.2018 | 680 |
| 12.04.2018 | 820 | | 24.04.2018 | 720 |
| | | | | 18950/24=790/– |

மேலும் வருவாய் ஆய்வாளர்(பொ) அறிக்கையின்படி அலுவலகம் மூலம் வசூல் செய்யப்படும் தொகை சராசரியாக நாள் ஒன்றுக்கு ரூ.790/– வீதம் கிடைக்கிறது. ஒரு ஆண்டிற்கு கணக்கிட்டு பார்க்கும் போது ரூ.2,88,850/– மட்டும் வருகிறது. மேற்கொண்டு இதற்கு தனியே ஒரு பணியாளர் நியமித்து வசூல் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி வசூல் செய்து வரும் துப்புரவு பணியாளர் திரு.பாலு என்பவரின் ஒரு மாத ஊதியம் ரூ.29034/–(12x29034=348408/–) அன்னாரின் 12 மாத ஊதியம் அலுவலகம் மூலம் வசூல் செய்யும் தொகையை விட அதிகமாக உள்ளது. எனவே நிதி இழப்பு தடுக்கும் பொருட்டு 6 முறை ஏலம் கோரியும் எவரும் ஏலம் கேட்க முன்வராத நிலையில் 13.04.2018ம் தேதியன்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற **திரு.ஆறுமுகச்சாமி** என்பவரின் உயர்ந்த பட்ச ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.2,30,000/– யினை ஒப்புக்கொண்டு அன்னாருக்கு 01.05.2018 முதல் 31.03.2021 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்க அங்கீகாரத்திற்காக.

(ந.க.எண் 4003/2017/அ3)

<u>தீர்மானம் எண். 121</u>

அங்கீகரிக்கப்படுகிறது.

<u>பொருள் எண்– 06</u>

இந்நகராட்சி குத்தகை இனம் தாமரைக்குளத்தில் மீன்பிடிக்கம் உரிமத்தின் மூன்றாண்டு குத்தகை காலம் 31.03.2018 உடன் முடிவடைவதால் இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.342 நாள்.23.11.201ன்படி 01.04.2018 முதல் 31.03.2021 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க தேவையான ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி மேற்படி இனத்திற்கு 19.01.2018, 27.01.2018, 16.03.2018, 23.03.2018 மற்றும் 28.03.2018ம் தேதியில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 28..03.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ எண் | பெயர் மற்றும் முகவரி | டெபாசிட் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.சு. கிருஷ்ணசாமி,<br>61/207, சுடலைமாடன் கோவில் தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர். | ரூ.15000/– | ரூ.22000/– |
| 2 | திரு.சு.மாடசாமி,<br>த/பெ.சுப்பையா பாண்டி<br>9C, கண்ணார் தெரு,<br>மேலக்கடையநல்லூர் | ரூ.15000/– | ரூ.20000/– |
| 3. | திரு.N.பாபு ராஜ்<br>24F, பள்ளிக்கூடம் தெரு,<br>கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர் | ரூ.15000/– | ரூ.28000/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். (3)ல் குறிப்பிட்டுள்ளதிரு.பாபுராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.28000/– கூடுதலாக உள்ளது. இத்தொகை 2015–16ம் ஆண்டு குத்தகை

தொகை ரூ.45600, 2016–17ம் ஆண்டு கத்தகை தொகை ரூ.47880/– 2017–18ம் ஆண்டு குத்தகை தொகை ரூ.52274/–ஐ விட குறைவாக இருந்ததால் 13.04.2018 அன்று பறுபடியும் 6 வது ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலம் கோரப்பட்டது. இவ்வேலத்திலும் யாரும் கலந்து கொள்ளவும் இல்லை. ஒப்பந்தப்புள்ளி ஏதும் சமர்ப்பிக்கவும் இல்லை. எனவே தொடர்ந்து 6 தடவை ஏலம் கோரியும் மூன்றாண்டு சராசரித் தொகைக்கு யாரும் ஏலம் கோர முன்வராத நிலையில் நிதியிழப்பை தடுக்கும் பொருட்டு வரிசை எண்.3ல் குறிப்பிட்டுள்ள திரு.N.பாபுராஜ் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஏற்று 01.05.2018 முதல் 31.03.2018 வரை குத்தகை உரிமம் வழங்க அங்கீகாரத்திற்காக.

( ந.க.எண் 4003/2017/அ3)

<u>**தீர்மானம் எண். 122**</u>

அங்கீகரிக்கப்படுகிறது.

<u>**பொருள் எண்– 07**</u>

இந்நகராட்சி குத்தகை இனம் அட்டக்குளம் ஊரணியில் 01.04.2018 முதல் 31.03.2021 வரை மூன்றாண்டுகளுக்கு மீன்பிடிக்கும் உரிமத்திற்கு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.342 நாள்.23.11.2017ல் அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி மேற்படி இனத்திற்கு 19.01.2018, 27.01.2018, 16.03.2018, 23.03.2018, 28.03.2018 மற்றும் 13.04.2018ம் தேதியில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 13.04.2018ம் தேதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ எண் | பெயர் மற்றும் முகவரி | டெபாசிட் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.மா. பெரியசாமி படையாச்சி<br>42, ஒடைமருகால் தெரு,<br>கிருஷ்ணாபுரம். | ரூ.3000/– | ரூ.2000/– |
| 2 | திரு.M. ஜோதிராமலிங்கம்,<br>35/99, வடக்கு விளைத்தெரு,<br>முத்துக்கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர் | ரூ.3000/– | ரூ.3100/– |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் குறிப்பிட்டுள்ள திரு. M. ஜோதிராமலிங்கம், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.3100/– அதிகமாக உள்ளது. மேலும் இவ்வினத்திற்கு தொடர்ந்து 6 ஆண்டுகளாக ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியும் யாரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. எனவே திரு.M. ஜோதிராமலிங்கம், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று 01.05.2018 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமம் வழங்க அங்கீரத்திற்காக.

(ந.க.எண் 4003/2017/அ3)

<u>**தீர்மானம் எண். 123**</u>

அங்கீகரிக்கப்படுகிறது.

**தனி அலுவலர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**